“தமிழ் எங்கள் உயிருக்கு நேர்”

# தமிழ்க் கல்விச்சேவை சுவிற்சர்லாந்து
# Tamil Education Service Switzerland

# பொதுத்தேர்வு 2018

## தமிழ்மொழி ஆண்டு 9

**நேரம்: 150 நிமிடம்**

**சுட்டெண்:** ____________________

## பகுதி – 1

**1. மிகப் பொருத்தமான விடைக்குரிய கட்டத்திற்குள் புள்ளடி இடுக.**

1 2 3

1. மொழி, கலை சார்ந்த விழாக்களுள் ஒன்று
   1. வேனில்விழா
   2. முத்தமிழ்விழா
   3. குடமுழுக்குவிழா

2. சிறந்த விழுமியப்பண்புகளுள் ஒன்றாகப் பேணப்படுவது
   1. பிறன்மனைநாடல்
   2. புறங்கூறல்
   3. வாய்மைபேசுதல்

3. இது நான் படித்த இலக்கணப்புத்தகம். இதில் பெயரெச்சம்
   1. இலக்கணம்
   2. படித்த
   3. புத்தகம்

4. இசைக்கருவிகளுள் கஞ்சக்கருவியாக அமைவது
   1. தண்ணுமை
   2. கைத்தாளம்
   3. நாதசுரம்

5. எழுபத்தைந்து ஆண்டுகள் முடிவடையும் போது கொண்டாடப்படுவது
   1. பொன்விழா
   2. வெள்ளிவிழா
   3. பவளவிழா

6. அல்லும்பகலும் அலைந்து வந்தேன்; எங்கள் ஆழி இறைவனைக் காண வந்தேன். இதில் ஆழி என்பதன் பொருள்
   1. மலை
   2. கடல்
   3. குளம்

7. கொடுங்கோல் அரசு வீழ்க இவ் வாக்கியம்
   1. ஏவல்வாக்கியம்
   2. வியங்கோள்வாக்கியம்
   3. வியப்புவாக்கியம்

8. மின்மினிப்பூச்சிகள் உகந்த வாழ்விடத்தைத் தேடிப்பறந்து போய்விட்டன. இதில் வந்துள்ள பெயரடை
   1. தேடி
   2. உகந்த
   3. பறந்து

9. மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம். இதில் அமிர்தம் என்பதன் எதிர்ப்பொருட்சொல்
   1. பால்
   2. நஞ்சு
   3. தேன்

1 2 3

10. நளன் காதலியைக் காரிருளில் கானகத்தில் கைவிட்டுச் சென்றான். இதில் காதலி என்று குறிப்பிடப்படுபவர்
 1. சீதை
 2. மணிமேகலை
 3. தமயந்தி

11. ‘நெல்லும் உயிரன்றே; நீரும் உயிரன்றே…’ எனத் தொடங்கும் பாடல் இடம்பெற்றுள்ள நூல்
 1. புறநானூறு
 2. மூதுரை
 3. நாலடியார்

12. அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்பன
 1. நாலறிவு
 2. நாற்குணம்
 3. நாற்பொருள்

13. தாய்மொழியில் ஆற்றல் பெற்றவர் பல மொழிகளையும் இலகுவில் கற்பர். இங்கு ஆற்றல் என்பதன் பொருள்
 1. உழைப்பு
 2. ஆக்கம்
 3. திறமை

14. நெடிற்றொடர்க் குற்றியலுகரப் புணர்ச்சி பெற்றுவந்த சொல்
 1. காடழிந்தது
 2. வண்டினம்
 3. ஏவுகணை

15. பண்டைய மக்கள் இயற்கையைத் தெய்வங்களாக வழிபட்டு வந்தனர். இதில் இயற்கை என்பதன் எதிர்ப்பொருட்சொல்
 1. வேட்டை
 2. மருட்கை
 3. செயற்கை

16. பல நாடுகளில் வாழும் தமிழ்மக்களை ஒன்றிணைக்கும் பாலமாக அமைவது
 1. தமிழ்மொழிக்கல்வி
 2. பிரஞ்சுமொழிக்கல்வி
 3. ஜேர்மன்மொழிக்கல்வி

17. ‘மக்காள் நீர் என்மக்கள் போல்கின்றீர் யார் மக்கள் …’ இத்தொடரில் மக்காள் என்பது ஏற்றுவந்த பொருள்
 1. இடப்பொருள்
 2. விளிப்பொருள்
 3. உடைமைப்பொருள்

18. முத்தமிழ்க் காப்பியம் என்று சிறப்பிக்கப்படுவது
 1. நளவெண்பா
 2. கம்பராமாயணம்
 3. சிலப்பதிகாரம்

19. சங்கம் அமைத்துத் தமிழை வளர்த்தவர்கள்
 1. பாண்டியமன்னர்கள்
 2. சோழமன்னர்கள்
 3. சேரமன்னர்கள்

**1 2 3**

20. மக்களுக்கு பெரும் களிப்பை உண்டாக்கும் இன்கலைகளுள் ஒன்று நாடகமாகும். இதில் களிப்பு என்பதன் பொருள்
    1. வெற்றி
    2. கொடை
    3. மகிழ்ச்சி

21. சிங்கத்தின் இளையது குருளை போல புலியின் இளையது
    1. கன்று
    2. போதகம்
    3. குட்டி

22. எவர் கையிலும் சிக்காத கல்; எங்கும் விற்காத கல். அது
    1. விற்றல்
    2. விக்கல்
    3. வாங்கல்

23. 'வான்குருவிக்கூடு வல்லரக்குத் தொல்கறையான்...' இப்பாடலைப் பாடியவர்
    1. ஔவையார்
    2. பாரதியார்
    3. குமரகுருபரர்

24. தூண்டிற் புழுவினைப் போல் எனது நெஞ்சம் துடித்ததடி... இத்தொடரில் வந்துள்ள உவமேயம்
    1. புழு
    2. நெஞ்சம்
    3. தூண்டில்

25. மத்திய கிழக்கு நாடுகள் பொருளாதாரத்தில் முன்னேற்றமடையக் காரணமாக அமைவது
    1. தானிய வகைகள்
    2. எரிபொருள் வளங்கள்
    3. நீர் வளங்கள்

(25×1=25 புள்ளி)

**2. சேர்த்தெழுதுக.**

1. கல்வி + கூடம் = ______________________
2. பூ + கொடி = ______________________
3. மேல் + உதடு = ______________________
4. புவி + இயல் = ______________________
5. வெம்மை + சினம் = ______________________
6. நல்ல + இணக்கம் = ______________________

(6×1=6 புள்ளி)

**3. பிரித்தெழுதுக.**

1. பண்ணிசை = ______ + ______
2. புலப்பெயர்வு = ______ + ______
3. குழலினிது = ______ + ______
4. கீழ்த்திசை = ______ + ______
5. கைம்மாறு = ______ + ______
6. சொற்சுவை = ______ + ______

(6×1=6 புள்ளி)

**4. கீழ்க்காணும் தலைப்புகளுள் ஒன்றினைத் தெரிவுசெய்து ஆறு வரிகளுக்குக் குறையாமல் கவிதை எழுதுக.**

1. தமிழே அமுதே…
2. வெற்றிப்படிகளில்…

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

(3 புள்ளி)

**5. கீழ்க்காணும் திருக்குறள்களை நிறைவுசெய்க.**

1. பொய்மையும் வாய்மை ______________________

______________________________________

1 புள்ளி

2. எண்ணித் துணிக ______________________

______________________________________

1 புள்ளி

**6. கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

எளிய நடையில் தமிழ்நூல் எழுதிடவும் வேண்டும்.
இலக்கணநூல் புதிதாக இயற்றுதலும் வேண்டும்.
வெளியுலகில், சிந்தனையில் புதிது புதிதாக
விளைந்துள்ள எவற்றினுக்கும் பெயர்களெலாங் கண்டு
தெளியுறுத்தும் படங்களொடு சுவடியெலாம் செய்து
செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்வதுவும் வேண்டும்.
எளிமையினால் ஒரு தமிழன் படிப்பில்லை என்றால்
இங்குள்ள எல்லோரும் நாணிடவும் வேண்டும்.
உலகியலின் அடங்கலுக்கும் துறைதோறும் நூற்கள்
ஒருத்தர் தயை இல்லாமல் ஊரறியும் தமிழில்
சலசலென எவ்விடத்தும் பாய்ச்சிவிட வேண்டும்.
தமிழொளியை மதங்களிலே சாய்க்காமை வேண்டும்.
இலவச நூற் கழகங்கள் எவ்விடத்தும் வேண்டும்.
எங்கள் தமிழ் உயர்வென்று நாம் சொல்லிச் சொல்லித்
தலைமுறைகள் பலகழித்தோம்; குறைகளைந் தோமில்லை.
தகத்தகாயத் தமிழைத் தாபிப்போம் வாரீர்!

1. புதிதாக இயற்றப்படவேண்டிய நூல் எது? 1 புள்ளி

_______________________________________________

2. தலைமுறைகள் பலவற்றை நாம் எவ்வாறு கழித்தோம்? 1 புள்ளி

_______________________________________________

3. நாம் எதற்காக நாணப்படவேண்டும் எனப் பாரதிதாசன் கூறுகிறார்? 1 புள்ளி

_______________________________________________

4. இப்பாடலிலிருந்து பின்வருவனவற்றைத் தருக.

   1. மோனைஅணி _______________________
   2. அடுக்குமொழி _______________________
   3. இரட்டைக்கிளவி _______________________
   4. குறிப்புவினைமுற்று _______________________ 4×½= 2புள்ளி

**7. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. தமிழர் கட்டடக்கலைக்குச் சான்றாக விளங்குவது எது? 1 புள்ளி

2. புறநானூறு என்னும் நூலில் அடங்கியுள்ள பாடல்கள் எத்தனை? இந்நூல் எவ்வகையான செய்திகளைக் கூறுகிறது? 1 புள்ளி

3. சிலப்பதிகாரத்தில் கூறப்பெற்றுள்ள மூன்று முக்கிய விடயங்களும் எவை? 1½ புள்ளி

4. வட்டக்களரியில் ஆடப்பெறும் இருவகையான கூத்துகள் எவை? 1 புள்ளி

5. தொகாநிலைத் தொடர் என்றால் என்ன? இது எத்தனை வகைப்படும்? 1 புள்ளி

6. ஐந்தாம் வேற்றுமை உருபுகளையும் பொருள்களையும் வாக்கியங்களில் அமைத்துக்காட்டுக. 2 புள்ளி

7. ‘செய்தனன்’ என்ற வினைப்பகுபதத்தின் உறுப்புகளைப் பிரித்துக்காட்டுக. 1 புள்ளி

8. கூட்டுவாக்கியம், கலப்புவாக்கியம், கூட்டுக்கலப்புவாக்கியம் என்பனவற்றிற்கு ஒவ்வோர் எடுத்துக்காட்டுத் தருக.

1½ புள்ளி

**8. கீழ்க்காணும் தலைப்புகளுள் ஒன்றினைப்பற்றி 125 சொற்களுக்குக் குறையாமல் எழுதுக.**

1. சிலப்பதிகாரம்
2. மனித விழுமியங்கள்
3. நோயற்றவாழ்வே குறைவற்றசெல்வம்

(8 புள்ளி)

# பகுதி - 2

**1. கீழ்க்காணும் உரைப்பகுதியை மூன்றிலொரு பகுதியாகச் சுருக்கி எழுதுக.**

தமிழர் இசைக்கருவிகளாக மேளம், தண்ணுமை, முழவு, தம்பட்டம், சிறுபறை, உடுக்கு, கஞ்சிரா, முரசு, புல்லாங்குழல், வீணை ஆகியவற்றைக் குறிப்பிடலாம். யாழானது நரம்புக்கருவி வகையைச் சேர்ந்தது. முரசு தோற்கருவி வகையைச் சேர்ந்தது. வங்கியம் எனப்படும் குழலானது துளைக்கருவி வகையைச் சேர்ந்தது. புறநானூற்றில் ஐம்பதாவது பாடல் வீரமுரசின் இயல்பினைத் தெளிவுபடுத்துகின்றது. போருக்குச் செல்வதற்கு முன் வீரமுரசத்திற்குப் பலி செலுத்துவது வழக்கம். வீர முரசத்தினை வைத்தற்குரிய கட்டிலானது மெல்லிய துகில் விரிக்கப்பட்டுப் பூக்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கும். மயிலின் தோகையும், பொன்னினாற் செய்யப்பட்ட உழிஞைத் தழையும் வீரமுரசத்தை அலங்கரிக்கும். சிலப்பதிகாரத்தில் சொல்லப்பட்ட கல்லோவியத்திலே இளம் பெண்கள் பலர் குழல், யாழ், மத்தளம் முதலிய கருவிகளை வாசிப்பதாகக் காட்டப்பட்டிருக்கிறது. இவ்வோவியத்தில் காட்டப்படும் யாழ் சகோடயாழ் ஆகும். குழல் இக்காலத்து நாதசுரத்தினுடைய நீளத்தை ஒத்தது. இதன் நீளம் இருபது விரலளவு என்பர். கருங்காலி, செங்காலி, மூங்கில், சந்தனம், வேம்பு, பலா என்னும் மரங்களாலும் வெண்கலத்தினாலும் குழல் செய்யப்படுகிறது.

(4 புள்ளி)

**2. கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

வட இந்தியாவிலே அயோத்தியைத் தலைநகராகக் கொண்ட கோசலநாட்டை வாய்மையிற் சிறந்த அரிச்சந்திரன் ஆண்டு வந்தான். அவன் கன்னோசி நாட்டு அரசனின் மகள் சந்திரமதியை மணந்துகொண்டு செங்கோல் ஆட்சிசெய்து வந்தான். அவர்களுக்கு லோகிதாசன் என்ற புதல்வன் இருந்தான். இக்காலத்தே இந்திரசபையில் தேவேந்திரன், முனிவர்களை நோக்கி சத்தியம் முதலிய குணங்களில் சிறந்த பூலோக அரசன் யாவன்? என வினவினான். "நேர்மைக்கும், உண்மைக்கும், பொறுமைக்கும் உரித்துடையவன் அரிச்சந்திரன் எனும் அரசனே" என்று விடை கூறினார் வசிட்டமுனிவர். இதைக் கேட்டுச் சகிக்காத விசுவாமித்திரர் "நான் செய்யப்போகும் சோதனையில் அவன் வெற்றியடைந்துவிட்டால் என் தவப்பயனில் பாதியை அரிச்சந்திரனுக்கே கொடுத்துவிடுவேன்" என்று சபதம் செய்தார். அரிச்சந்திரனைப் பொய் சொல்ல வைப்பதற்காகப் பல்வேறு சூழ்ச்சிகளைச் செய்தார். இதனால் அரிச்சந்திரன் தனது நாடு நகர் இழந்தான். மனைவியையும், மகனையும் காலகண்டன் என்ற கொடிய குணமுடைய அந்தணனுக்கு விற்றான். காலகண்டன் வீட்டில் சந்திரமதியும் லோகிதாசனும் அடிமைத்தொண்டு புரிந்தனர். அரிச்சந்திரன் சுடலை காக்கும் புலையன் தொழிலில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டான். அவனைப் பல துன்பங்கள் அடுத்தடுத்துத் துரத்திச் சென்றன. இருந்த போதிலும் அவற்றையெல்லாம் கடந்து வாய்மை தவறாது வாழ்ந்து காட்டினான்.

1. கோசலநாட்டை ஆட்சிபுரிந்த அரசன் யார்?

______________________________

2. 'என் தவப்பயனில் பாதியை அரிச்சந்திரனுக்கே கொடுத்துவிடுவேன்' என்று கூறியவர் யார்?

______________________________

3. பூலோகத்தில் சத்தியம், பொறுமை முதலிய குணங்களில் சிறந்தவன் யார்?

______________________________

4. காலகண்டன் எத்தன்மையுடையவன்?

______________________________

5. அரிச்சந்திரனைப் பொய்சொல்ல வைப்பதற்காகப் பல சூழ்ச்சிகளைச் செய்தவர் யார்?

______________________________

6. நாடு, நகர், இழந்த அரிச்சந்திரன் என்ன தொழில் செய்தான்?

______________________________

7. அரிச்சந்திரன் எத்தகையவன் என வசிட்டர் கூறினார்?

______________________________

(7×1= 7புள்ளி)

3. கீழ்க்காணும் உரைப்பகுதிகளுள் உமக்குத்தெரிந்த மொழியிலுள்ள உரைப்பகுதியினைப் படித்து அதன் தமிழாக்கத்தை எழுதுக.

(4 புள்ளி)

**Deutsch**
**Bildung ist Investition in die Zukunft**

Die Bildung trägt dazu bei, dass die Unternehmen über gute qualifizierte Fach- und Führungskräfte verfügen. Die Bildung ist zugleich mit ein Grund dafür, dass die Schweiz über eine tiefe Arbeitslosenquote verfügt; auch bei den Jugendlichen. Mit dem demografischen Wandel dem Fachkräftemangel und der Digitalisierung stehen wir aber vor grossen Herausforderungen, die wir nur bewältigen können, wenn wir unter anderem weiterhin auf gute Bildung setzen.
Gute Bildung ist aber nicht allein Aufgabe des Staates. Alle müssen Verantwortung übernehmen und unserem Bildungssystem Sorge tragen. Diese gemeinsame Verantwortung zeigt sich beispielsweise in der Berufsbildung, wo die Unternehmen sich massgeblich an der Aus- und Weiterbildung beteiligen.

**Français**
**Former, c'est investir dans l'avenir**

La formation permet aux entreprises de disposer de spécialistes et de cadres qualifiés. Elle contribue aussi au faible taux de chômage, notamment chez les jeunes. L'évolution démographique, la pénurie de personnel qualifié et la digitalisation constituent des défis majeurs que nous ne pourrons relever qu'en continuant à miser notamment sur une formation de qualité.

Assurer la qualité de la formation n'est pas du seul ressort de l'Etat. Tous les acteurs sociaux doivent assumer leurs responsabilités et veiller au bon fonctionnement de notre système de formation. Cette responsabilité commune s'exprime par exemple dans la formation professionnelle où les entreprises s'impliquent fortement dans la formation initiale et continue.

**Italiano**
**L'istruzione è un investimento per il futuro**

Grazie alla formazione le aziende dispongono di professionisti e manager altamente qualificati e la Svizzera può vantare anche un basso tasso di disoccupazione fra i giovani. Tuttavia i cambiamenti demografici, la carenza di personale qualificato e la digitalizzazione ci pongono di fronte a delle sfide importanti, che possiamo superare solo continuando a puntare su una buona formazione.

Tuttavia, garantire una buona formazione non è solo compito dello Stato. Ognuno deve assumersi le proprie responsabilità e assicurare il funzionamento del nostro sistema formativo. Questa responsabilità comune si riflette ad esempio nella formazione professionale, dove le aziende partecipano attivamente alla formazione e alla formazione continua.

| பணியகப் பயன்பாட்டிற்கு: | | | |
| --- | --- | --- | --- |
| விடைத்தாள் மதிப்பீடு | முழுப்பெயர் | கையொப்பம் | மொத்தப்புள்ளிகள் |
| முதலாம் முறை | | | |
| இரண்டாம் முறை | | | |
| இறுதிப்புள்ளிகள் | | | |